# இறை நிலையும் தமிழின் சிறப்பும்

## Spirituality and the Excellence of Tamil

உதவிப்பேராசிரியர் தி.யோகேஸ்வரன்
Assistant Professor T. Yokeswaran[1]

**Abstract**

Spirituality is a unique factor which has been conceived by many saints from time immemorial. Tamil society calls such saints Siddhars. These Siddhars concider the ununderstandable nature as the base for spirituality. If one perceives it in the rihgt way could see god. This state of becoming on with god is boosted by the comprehension of the donation of nature. It is said tamil language is the donation of nature which further gives birth to other languages like Sanskrit, Hindi, Telugu, Kannada and Tulu. Tamil is also known as the language of God and through which the traits of spirituality are broughty out. The five natural elements and nine planets are made public to the world only as life force, Moon as body, Sevvai as eyes, Bhudan as feeling, Guru as nose, Sukiran as tongue, Sani as ears, Rahu as Anus and Kethu as genital organ. The nuance about life and death has been highlighted in tamil. Spirituality resolves all these riddles.

**Key Words**: Spirituality, Siddha, god, consciousness Agaporul, Agasthiar, Attamasitti

### முன்னுரை

ஆதியும் அந்தமுமில்லா அருட்பெருஞ்சோதி வடிவமாக, ஒளியாக இயற்கையென்னும் ஓர் அற்புத நிகழ்வாக எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறை என்னும் அற்புத சக்தி பற்றியும், சித்தர்கள் தோன்றிய காலந்தொட்டு அவரவர்கள் கண்டு மெய்ப்பித்த இறையார்ந்த செய்திகள் எண்ணிலடங்கா. பஞ்சபூதங்களின் வெளிப்பாடே இறையென்றும் அவற்றின் வியத்தகு விண்ணில் பரந்த அண்டவெளியான பரம்பொருள் நிலையே மேனோக்கு நிலையில் காணும் யாதுமோர் இணையில்லாத நிலையே எல்லா மதங்களும் இன்ன பிறவும் ஏற்றுணர்ந்த அறிவார்ந்த ஓர் உன்னதமே இறை என்றும் பஞ்சபூதங்கள் என்றும் கண்ணால் காண்கின்ற அற்புதத்தை வழிபட்டனர். நம் முன்னோர், எனில் மிகையல்ல. அவ்வாறு இறையென்னும் அற்புத உருவால் உருவான இத் 'தீந்தமிழே முதல் மொழி என்றும் இந்தி, சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம், துளு போன்ற பண்டைய மொழிகளுக்கும் மூலாதார மூலக்கூறுகளை உள்ளடக்கிய ஓர் உன்னத எழுத்து வடிவமே 'தமிழி' என்று பண்டைக் காலத்தில் வழங்கப்பட்டு, பின் தமிழ் என அழகிய நிலையையும், அதன் சொல்லாட்சி நிலைப்பாடு இறைவனால் அருளிச் செய்த இறையனார் அகப்பொருளே தமிழ் முதல் நூல்" என்னும் அதனில் ஆளப்படும் சொல்லாட்சி நிலைகளை உணருங்கால் தமிழின் இன்பச் சுவைதனை எந்நாடும் புகழ்பாடுமே.

1 Author is a lecturer in the Department of Tamil, D.G.Vaishnav College (Autonomous), Chennai, Tamil Nadu, India. yokeshwaran46@gmail.com

முதலில் இறை என்னும் நிலை பற்றியும், தொடர்ந்து பஞ்சபூதங்கள் சித்தர்களின் உள்ளார்ந்த கருத்துகளையும் தமிழின் சொல்லாட்சி மூலமே இறையனார் அகப்பொருள் எனும் முதநூலின் சில செய்திகளையும் இக்கருத்துரையின் கண் அறிந்துணர்வோம்.

## இறை

"ஆதியும் அந்தமுமில்லா அருட்பெருஞ்சோதியே" "அருவமும் உருவமுமில்லா அருவுருவமே" "வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி ஊனாகி உயிராகி" எனவும், "பொங்குபல சமயமெனும் நதிகள் எல்லாம் புகுந்து கலந்திட நிறைவாய்"; பொங்கியோங்கும் கங்குகரை காணாத கடலே!" "இயற்கை யென்னும் அற்புதத் திருவே" எனப் பல விதங்களில் போற்றப்பெறும் "அருள் நிலையே" "இயற்கை ஒளியே" முதற் கடவுளாக வழிபட்ட நம் பண்டைத் தமிழரின் வழிபாடு போற்றுதற்குறியதே (Rajantheran & Raja Viknarasah, 2014,p 130.

## சமயங்கள்

சைவம், வைணவம், சமணம், பௌத்தம் எனப் பல சமயங்கள் தோன்றினாலும் இவை உணர்த்தும் ஒரே நிலைப்பாடு அல்லது மெய்ப்பாடு "இறையென்னும் அற்புதத் சக்தியே" "இயற்கையே" என்பதை இக் கருத்துரையில் காண்போமே. சமணமும் பௌத்தமும் சைவ நெறி சார்ந்து ஒழுகியது என்பதனால் சைவத்தின் பாற்பட்டு இறை நிலையை உணருங்கால் இறைவன் ஒளி வடிவமானவன்; ஓர் எல்லைக்குட்படாத அற்புத சக்தியாக அருள் நிலையாக எங்கும் நீக்கமற நிலைத் திருப்பவன் என்றே சொல்வோமாக.

'இறை - கடவுள்' என்ற இரண்டுமே ஆண் என்றும் பெண்ணென்றும் இல்லாமல் பொதுப் பெயராக வைத்தார்கள் நம் முன்னோர் எனின் உலகியல்பாக ஆணே வலிமை சார்ந்தும் வாழ்வு சார்ந்தும் அமைவதால் இறைவன் என்று முன்னிறுத்தினர்.

வைணவத்தில் திருமாலின் திருவடியைப் பணிந்தாலே நாம் கிடைத்தற்கரிய பெறற்கரிய எல்லாவற்றையும் பெற்று விடலாம் என்றும் அவர் பாதம் பணிபவருக்குப் பாவ புண்ணியங்கள் பொறுத்தருளப்படும் என்றும் வைணவ இலக்கியங்கள் சுட்டுகின்றன. ஆனால் திருமாலின் அவதாரங்கள் என்ற நிலையிலும் திருமால் வழிபடும் முதற்கடவுளாக சிவபெருமானையே முன்னிறுத்துவதும் சைவத்தை முன்னிறுத்தியது என்றும், எனின் சைவ சமய மார்க்கமான இறை நிலையை அடையக்கூடிய ஓர் சரியான ஆற்றுப்படுத்தலை மேனோக்கு நிலையில் அனைவரும் ஒப்புக்கொண்டனர் என்றே கருத வேண்டியுள்ளது.

சைவ சித்தாந்தம் என்றாலும் முடிவில் அதாவது ராமலிங்க அடிகள் கூறுவதும், சித்த புருஷர்கள் போற்றுவதுமான சரியை ஓர் நான்கும், கிரியை ஓர் நான்கும், யோகம் ஓர் நான்கும், ஞானம் ஓர் நான்கும் எனப் பதினாறு நிலைகளாக இறைவனை அடைய முடியும் என்றும், இதில் ஞான நிலையே 'பரம்பொருள் ஒன்றே' அவன் உருவமற்ற அருவமாக திகழ்பவன்; எங்கும் ஒளிவடிவில் உலகம் உய்ய நிகழ்த்துபவன் என்றே கொண்டு வழிபடல் சிறந்ததென்று முன்னோர் கூறினரே.

'தெய்வத்தாற் ஆகாதெனினும் முயற்சி தன்
மெய்வருத்தக் கூலி தரும்'

என திருவள்ளுவரும்

"நாடிவருவதெது பாவ புண்ணியமல்லாது.
நாம் அறையில் அணியும் கோவணமும் வராது
நன்குணர்ந்து கொண்டு சிந்தையுள் தெளிந்து
அவனைக் காப்பதும் பாரமைய்யா"

என பட்டினத்தாரும்

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என திருமூலரும்
வானத்தான் என்பாரும் என்கமற்று உம்பர் கோன்
தானத்தான் என்பாரும் தாம் என்க ஞானத்தான்
முன்நஞ்சத்தால் இருண்ட மெய்யொளிசேர் கண்டத்தான்
என் நெஞ்சத்தான் என்பன் யான்"

என காரைக்கால் அம்மையாரின் இறை பற்றிய சிந்தனையை இப்பாடல் மூலம் அறியலாம். "காதற்ற வூசியுங் வாரா துகாண் கடைவழிக்கே" என பட்டினத்தடிகள் சொன்ன வாக்கிற்கேற்ப இறுதியில் மிஞ்சப்போவது நாம் சேர்த்து வைத்த பொன்னும் பொருளும் கூட வராது, சாம்பலே என்பதை உணர்ந்த திறமே கண்ணாற் காண்கின்ற ஒளியை 'பஞ்சபூதங்களை' தெய்வமாக வழிபட்டனர; என்பதும், பஞ்சபூத அடிப்படையிலேயே நம் உடல் அமையவும், மாற்றங்களும் இன்ன பிறவும் அமையுமெனின்,

"காயமே இது பொய்யடா
வெறும் காற்றடைத்த பையடா"

என சித்தர்களும்

"தெற்சபை உலகத் துயிர்க்கெலாம் இன்பம்
செய்வதென் இச்சையாம் எந்தாய்"

என இராமலிங்க அடிகளும் இறைநிலை பற்றி விளக்குகின்றனர். அருள் நிலையான பரம்பொருளின் நிலைப்பாட்டை விளக்குங்கால் இறையெனப்படுவதும் 'இயற்கையே.' தமிழர் தம் வழிபாடுகள் அவரவர் குலத்திற்கேற்ப சிறு, குறு தெய்வ வழிபாடுகள் எனப் பலவாறு இருந்தாலும், பல சமயங்களாக இருந்தாலும், மூலப்பொருளை மேனோக்கு நிலையில் நோக்குங்கால் "உருவமும் அருவமுமில்லாத ஓர் அற்புத நிலையே" இறை என்று உணரும் "மனித மனமும் ஓர் இறையே."

## பஞ்ச பூதங்களும் சித்தர்களும்

காயமே இது பொய்யடார்... வெறும் காற்றடைத்த பையடா என்பது சித்தர்களின் வாக்கு. புறத்து இயங்கும் காற்றே நாம் சுவாசித்து வெளியிடுவது இதன் இயக்கம் நம் உடலில் நன்கு அமையும் வரை நோய் நொடியின்றி நெடிது நாள் வாழலாம். வாழ்க்கையின் வெற்றியே இதுதான்

## சித்தன் யார்

சித்தர்கள் ஓரிடத்தில் நில்லா வாழ்க்கையர். சித்தர்கள் காற்றில் பறப்பர், கடலில் நடப்பர், நிலம் தொட்டுப்புகுவர், வானம் கீறுவர், அளவில் ஆற்றலர். ஒரே சமயத்தில் ஈரிடத்தில் இருப்பர், (Rajantheran et.all, 2014,p.27). பாம்பன் சுவாமிகள், யோகசாமி ஆகியோர்

"சிந்தை தெளிந்திருப்பவனார்? அவனே சித்தன்
செகமெல்லாம் சிவமென்றே அறிந்தோன் சித்தன்"

ஊன் சுருக்கி உள்ளொளி பெருக்கிய இவர்கள் போல்வார் பலர் இருந்த புண்ணிய பூமி இது. வள்ளிமலை, கொல்லிமலை, திருவண்ணாமலை, பர்வதமலை, பொதியமலை சார்ந்த பகுதிகளில் சித்தர்கள் வாழ்ந்து மக்கட்கு அருள் செய்தனர்.

மக்கள் நலன் கருதி பக்குவப்பட்ட ஆன்மாக்கள் பயன் பெற வேண்டிய எளிய மக்கள் பேசும் தமிழிலேயே பல நூல்கள் யாத்தளித்தனர். சாரியை, கிரியை, யோகம், ஞானம் பற்றி விளக்கியதோடு நில்லாது வைத்திய முறைகளையும் கற்றுத் தேர்ந்து பாமர மக்களின் பிணி தீர மருத்துவராக பணிபுரிந்தனர். (Silllalee, 2013,p.55) என்றால் சாத்தியமே. பற்றற்ற நிலையே பரம் பொருள் என்பதை அன்போடு நெஞ்சில் பற்றிக் கொள்ளுங்கள்.

"ஆறாதாரத்; தெய்வங்களை நாடு
அவர்க்கு மேலான ஆதியைத் தேடு"

(இடைக்காட்டுச் சித்தர்)

## பரம்பொருள்

அணையாத சோதி ஒன்றுண்டு. அது அனாதி காலமாய் விளங்குவது அளவிலாத கற்பனையைக் கடந்தது. இருளைப்போக்க

மின் விளக்கை ஏற்றுகின்ற நாம் மருளைப்போக்க மனவிளக்கை ஏற்ற வேண்டும்.

கி.பி. 5ம் நூற்றாண்டுக்கும் 14ம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த பிரம்ம ஞானிகளே சித்தர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். கி.பி. 5ம் நூற்றாண்டுக்கும் முன்னதாக குருதட்சிணாமூர்த்தி சித்தர் தோன்றியுள்ளார். இவர் ஆதியும் அந்தமும் அருவமும் உருவமும் அருவுருவமும் அல்லாத ஞான மயமான மூலப் பரம்பொருளின் வெளிப்பாடே ஆவார். இவர் குரு தட்சிணாமூர்த்தி வடிவத்தில் முதல் ஞானசிரியராக வெளிப்பட்டு, முனிவர்கள் நால்வருக்கும் கல்லால மரத்தடியில் மோன நிலையில் இருந்து சூன்யமயான சுத்த பரஞானத்தைச் சொல்லாமல் சொல்லிப் புரிய வைத்ததே பிரபஞ்சத்தின் முதல் உபதேசமாகும். இவர் சித்த பரம்பரை தோன்றுவதற்கே முதல் வித்திட்டவராவார்.

பஞ்ச முக சிவத்தின் ஆக்ஞை மையத்திலிருந்து பிரபஞ்ச ஆற்றலின் உன்னத நிலையான ஆறுமுகச் சிவமாக இந்த சித்து வெளிப்பட்டது. இந்த சித்து மனித இதயமான அகத்திற்கு உணர்த்திய உன்னத ஞானமே குரு முகமாக இந்த ஞானத்தைப் பெறுபவர்கள் யாவருமே அகத்தியர்கள் தான்.

அகத்தியர் என்ற சொல் ஒரு காரணப்பெயர் அகம்+தீ+அர் எனப் பிரித்தால் அது ஞானத் தீயையே இதயமாகக் கொண்டவர் எனப் பொருள் படும்.

"மாங்காய்ப் பாலுண்டு மலைமேல் இருப்போர்க்கு
தேங்காய்ப்பால் எதுக்கடி குதம்பாய்?"

(குதம்பைச் சித்தர்)

தேங்காய் பாலுண்டு வாழமுடியும். மாங்காய் பால் எடுத்து உண்ண முடியுமா? எனில் இப்பரிபாஷையின் சொல்லின் உட்பொருள் சித்தர்களின் வழிவந்த ஞானிகளுக்கே வெளிச்சம்.

சித்தர்கள் உலகியல் வாழ்வைப் பற்றி சிறிதும் சிந்திக்காதவர்கள் உடை கோவணம் உண்டு உறங்கப் புறத்திண்ணை உண்டு. உணவு இங்கு அடைகாய் இலை உண்டு. அருந்தத் தண்ணீர் உண்டு என்று இருப்பவர்கள் சித்தர்கள். இறைவனை நாடிட குருவைத் தேடி காட்டிலும், மலையிலும் திரிபவர்கள் சித்தர்கள். உபதேசம் பெற்ற பின்பு மௌனமாய் தவத்தில் நிலைப்பர் ஆகவே சித்தர்களுடைய பிறப்பு, வளர்ப்பு, வாழ்க்கைப் பற்றி உலக மாந்தர் அறிந்து கொள்ள வாய்ப்பில்லை.

அபிதான சிந்தாமணியில் பதினெண் சித்தர்களின் பெயர்கள்: 1)அகத்தியர் 2) போகர் 3) கோரக்கர் 4) கயிலாச நாதர் 5) சட்டைமுனி 6) திருமூலர் 7)நந்தி 8) கூன்கண்ணர் 9) கொங்கணர் 10) மச்சமுனி 11) வாசமுனி 12) கூர்முனி 13) காலமுனி 14) இடைக்காடர் 15) புண்ணாக்கீசர் 16) சுந்தரானந்தர் 17) உரோமமுனி 18) பிரம்மமுனி.

நம்நாட்டுச் சித்தர்கள் எனும் நூலில் சித்தர்கள் 25 ஆக பட்டியல் தரப்பட்டுள்ளது. 1) அகத்தியர் 2) அகப்பேய் 3) அழுகணிச் சித்தர் 4) இடைக்காடர் 5) இராமதேவர் 6)ராமலிங்கர் 7) உரோமமுனி 8)கபிலர் 9)கருவூரர் 10) காகபுஜண்டர் 11) தேம்பைச் சித்தர் 12) கொங்கணா 13) கோரக்கர் 14) சட்டைமுனி 15) சிவவாக்கியர் 16) தன்வந்திரி 17) திருமாளிகைத்தேவர் 18) திருமூலர் 19) தேரையர் 20) நந்தி 21) பாம்பாட்டிச்சித்தர் 22) புலத்தியர் 23) புலிப்பாணி 24) போகர் 25)மச்சமுனி என்பவர்களாவர்.

"நல்லவர் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லோர்க்கும் பெய்யும் மழை"

என்ற வாக்கிற்கேற்ப சித்தர்களின் உன்னத வாழ்வும் செயலும் ஏற்புடையது.

## அகத்தியர்

துருவ நட்சத்திரம் பூமிக்கும் பாதுகாப்பாக (கைலாய பதியின் விருப்பத்திற்கிணங்க)

பூமிக்குத் தெற்கே வெகு தொலைவில் நாம் வாழும் பால்வழி நட்சத்திர மண்டபத்திலேயே மிக அதிக ஒளி மிக்க நட்சத்திரமாக இருந்து பூமியின் சமன்பாட்டை பாதுகாத்து வருகிறார் அகத்தியர். அவர் உள்ள இடம்.

துருவ நட்சத்திரம் உள்ள வடக்கு திசையை துல்லியமாக அறிந்துணர புலகர் கீரது, அத்தரி, புலத்தியர், ஆங்கிரசர், வசிஷ்டர், மரீசி ஆகிய சப்த ரிஷிகளும் உலக மக்கள் எளிதில் பார்க்கும் வண்ணம் சப்தரிஷி மண்டலமாக அமைந்திருந்து பூமியின் வட பாகத்தை சிவப் பரம்பொருளான துருவ நட்சத்திரம் உள்ள திசையைத் துல்லியமாகக் காண்பித்து வருகிறார்கள்.

அண்டார்டிகா கண்டத்தை உள்ளடக்கிய பூமிக்குத் தெற்கே வெகு தொலைவில் ஆர்கோ கப்பல் (ALPHAARGOS) என்ற ஒரு மிகப்பெரிய நட்சத்திர தொகுதி உள்ளது. அந்த கப்பலில் நான்கு தளங்கள் உள்ளன. நான்காவதான அடித்தளத்தில் ஆல்பா ஆர்கஸ் என்ற (GALAXIES) நட்சத்திரம் உள்ளது. அதுவே அகத்தியர் நட்சத்திரம். இந்த அகத்தியர் அண்ட வெளியில் உள்ள அனைத்து நட்சத்திர மண்டலங்களிலும் (புயுடுயுஓஐநுளு) இரண்டாவது பேரொளி மிக்க நட்சத்திரமாகத் திகழ்கிறார்.

ஆல்பா ஆர்க்ஸ் என்ற கிரேக்க மொழிச் சொல்லையும் அகத்தியர் என்ற தமிழ்ச் சொல்லையும் கூர்ந்து கவனித்துப் பார்த்தால் சொல் அமைப்பிலும் பொருள் நுட்பத்திலும் இந்த இரண்டு சொற்களும் பெரிதும் ஒத்திருப்பதைக் காணலாம் (எ.கா) ஆல்பா மனம் அகமனம் உடல் கூறு அடிப்படையிலேயே சிதம்பரம் முதலான பழங்கால சிவாலயங்கள் யாவும் எழுப்பப்பட்டுள்ளது. சித்தர்கள் நெறிப்படி நந்திக்கும் சிவத்திற்கும் இடையே இடைவிடாது வாசி ஓட்டம் (உள் சுவாசம், வெளிசுவாசம்) நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த சுவாச ஓட்டத்தில் நந்தியம்பெருமான் ஆக்ஞையோடியைந்த நாசித் துவாரங்களாகவும் சிவப் பரம்பொருள் சகஸ்ரதளமாகவும் உள்ளன. சிவமும் நந்தியும் பிரிக்க முடியாது ஒன்று. குரு தட்சிணாமூர்த்தியிடம் ஞானம் பெற்ற எண்மால் ஒருவரான திருமூலர் இறைவனை நந்தியாகவே கொண்டுள்ளதும். சிவமும் நந்தியும் வேறுவேறல்ல என்பதை உறுதி செய்கிறது. பதினென் சித்தர்களில் பெரும்பாலோர் பிரசித்தி பெற்ற தமிழகக் கோவில்களில் சமாதி பூண்டோடு அல்லது சிவத்துடன் கலந்தோ இருந்து அந்தந்த கோவில்களில் மூலவராகவே இருந்து அருளாட்சி செய்து வருகின்றனர்.

சிவனார் சுமார் 6000 ஆண்டுகளுக்கு முன் ஒருமுறை அருள்மிகு குரு தட்சிணாமூர்த்தியாக அவதாரம் செய்திருக்கிறார். இவர் யாரிடமும் தீட்சை வாங்கியவரல்லர். உலகின் முதல் குருவாகத்தோன்றி பலருக்குத் தீட்சை அளித்து உலகை உய்விப்பதற்காக ஒரு சித்தர் பரம்பரையையே உருவாக்கியவர் என்பதும் இதனை 29.08.1835ல் பிறந்து நாளது வளர் - பிறை புதன்கிழமை ஆவணி மாதம் 12ந் தேதி திருதியைதிதி உத்திரம் நட்சத்திரம் கூடிய நன்னாளில் பகல் 12 மணிஅளவில் விருச்சிக லக்னம் கன்னிராசி கூடிய நல்லோரையில் திருவாரூர் வன்மீக புரத்தில் ஜீவசமாதி பூண்டு அருவமாய் இருக்கும் அண்டங்கள் அனைத்தையும் இயக்கிவரும் அந்த ஆதிப்பரம் பொருளே அன்றி, வேறு அல்ல என்பது இங்கு ஓர்ந்து உணரற்பாலது.

அதாவது எட்டு சீடர்களுக்கு பரம்பொருள் குரு தட்சிணாமூர்த்தியாக முதல் அவதாரம் எடுத்திருந்த போது 6000 ஆண்டுகளுக்கு முன் ஆன்மிக உபதேசம் செய்திருக்கிறார். அவர்களில் சனகர், சனந்தனர், சனாதனர், சனந்தகுமாரர் ஆகிய நால்வருக்கும் கல்லால மரத்தடியில் இருந்து சொல்லாமல் சொல்லி, (மோன மொழியில்) ஞானோபதேசம் செய்திருக்கிறார், சிவயோக

*மாமுனி, பதஞ்சலி, வியாக்ரமபாதர், திருமூலர் ஆகியோர் மற்ற நால்வர். இந்த உண்மையை திருமூலர் 65ம் பாடலில்*

"நந்தி அருள் பெற்ற நாதரை நாடினின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றிவர் என்னோடு எண்மருமாமே..."

*திருவன்மியூரில் மருந்தீஸ்வரர் கோவிலில் சமாதியடைந்த வன்மீகரின் முற்றறிவு முதல் பாடல் முதல் வரியே இறை ஞானத்தைத் தெளிவு படுத்தும்*

"இருள் வெளியாய் நின்ற சிவபாதம் போற்றி"

*இடம் காலம் இயக்கம் ஆகிய மூன்றையும் தன்னகத்தே கொண்டு எல்லாவற்றையும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐம்பெரும் தொழில்கள் மூலம் இயக்கி வரும் பேரியக்க மண்டலமான இருள் வெளியே அவர் கண்ட ஆதிசிவம். இந்த சிவத்தையே ஞானிகள் பரப்ரம்மம், பரம்பொருள் என்றெல்லாம் கூறி வருகிறார்கள். இறைவனைக் காண இயலவில்லை. அழுக்காறு அடுத்துக் கெடுப்பது, கொலை, களவு, பொய்யுரைத்தல் இவைகளை நீக்க வேண்டும் எல்லாவற்றிற்கும் மனித மனமே காரணமாகயிருக்கிறது.*

"உள்ளத்துக்குள்ளே உள்ளதடா உலகம் - நல்ல
உள்ளத்தைக் கொண்டால் உலகிருள்; விலகும்"

*(சித்தர் வாக்கு)*

## சித்தர்களின் ஆற்றல்

நீணிலம் நலம்பெற இறைவனை தியாகத்தில்
நினைத்துக் கொண்டே இருப்பார்
மருத்துவப் பணிக்கென மூலிகைத் தழைகளை
மண்ணிலே கண்டறிந்தார் - தம்
உருவமே காணாத மாயா ஜாலத்தை
உலகிடை செய்தறிந்தார்.
மாந்தர் தாரணி மீதினில் ஞானம் அறிந்திட
நாடிக்கொண்டே யிருந்தார்
பச்சை இலைகளின் மருத்துவ குணங்கண்டு
பல்லோரின் நோய் தீர்த்தார்
கச்சிதமாகவே ரசவாத முறையினால் செம்பை
கனகமாய் மாற்றி வைத்தார்
கூடுவிட்டு ஆவியை புகுந்திடும் முறைதனை
குறையின்றி செய்திடுவார் புவியில்
கேடுகெட்ட மானிடர் ஞானம் பெற்றிட
நல்வழி காட்டிடுவார்"

***1) அஷ்டமா சித்திகள்***

*அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பவனவாம்.*

***2) நாடிகளின் நிலை மூன்று***

*சூரியன் சந்திரன் அக்கினி என்னும் மூன்று நாடிகளின் நிலையை இடைகலை, பிங்கலை, சுழுமனை என மூன்று சுவாசமாக இடைகலை இடநாசியிலும், பிங்கலை வலநாசியிலும் சுழுமனை இரு நாசிகளிலும் வருமெனலாம். இதற்கு அஜபா (சத்தம்) என்று பெயர்.*

***3) பஞ்ச பூதங்கள்***

*பிருதிவி - பூமி - மஞ்சள்*

*அப்பு - நீர் - வெண்மை*

*தேயு - நெருப்பு - சிவப்பு*

*வாயு - காற்று - பச்சை*

*ஆகாயம் வான்வெளி - கறுப்பு*

***4) மனமானது***

*சலம், கனல், வாயு ஆகிய மூன்று பூதங்களால் ஆனது என்றும், உடல் பிருதிவி உள்வாங்கும் காற்று. அப்பு சேர்ந்த வடிவே மனித உரு என்றாம் இறை படைப்பில்.*

***5) சரியை***

*மண்ணுயிரும் தன்னுயிர் போல எண்ணுவது சரியை*

*கிரியை மனுநீதியும் குருமொழியும் தப்பாதிருப்பது கிரியை*

*யோகம் - ஒன்றாமே அலையும் மனமொருங்குவது யோகம்*

ஞானம் - எப்போதும் தன்பரமாய் நின்றதுவே ஞானம்

*6) தேகம் ஐந்து*

இருள் தேகம், மருள் தேகம், சுத்த தேகம், பிரணவ தேகம், ஞான தேகம்

*7) ஓரறிவு முதல் ஆறறிவு உயிர்கள்*

- ஐவகை உற்பவம்: பிருதிவியினிடம் உற்பீசமான வித்துகளாம் புல் பூடு கொடி, செடி மர முதலியவைகள்
- அப்புப்பூதம்: சராயுமான பையின்; இடமான மானிடம் பசு ஆடு மிருகாதிகள்
- தேயு பூதம்: சுவேதசம், வியர்வை வெப்பத்தால் ஈ பேன், கீடம், கம்பளிப் பூச்சி, புழு
- வாயு பூதம்:அண்டசம், முட்டையில் கோழி, வாத்து, பல்லி, ஓணான், சர்ப்பம், கோட்டான், கருடன்
- மந்திர பீசம்: ஆகாயம், இது மஹான்களால் சிருஷ்டிக்கப்படும் இதில் ஓரறிவு உடையவை புல் மரம் செடி இவை பரிசமறியும்
- ஈரறிவு: சிப்பி, சங்கு, இவை பரிச ரசமரியும்
- மூவறிவு: கறையான், எறும்பு, இவை பரிச, ரச கந்தம் அறியும்
- நாலறிவு: தும்பி வண்டு, இவை பரிச, ரச, கந்த, ரூபம் அறியும்
- ஐந்தறிவு: பறவை மிருகங்கள், இவை கந்த, பரிச. ரூப ரச. கந்தமறியும்
- ஆறறிவு: மானிடர்கள், ஞானமாகிய அறிவும் பொருந்தியவர்கள்

ஆணவம் கண்மம் மாயை ஆகிய மும்மலமும் நீங்கிய ஆத்மா அருளோடு கூடிய ஞானமாகும்.

## இறை (வன்)

இப்பேருலகைத் தோற்றுவித்தவர் யார் என்ற வினா நம் உள்ளத்தில் எழுகிறது. அதற்குத் தெளிவான விடை இறை எனும் அற்புத சக்தியே என்பது புலனாகிறது. நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்கள் முறையே பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் என சித்தர்களால் குறிக்கப் பெறுகிறது.

பல உயிர்களை படைத்த இறை சக்தியால் அறிஞர்கள், ஞானிகள், யோகிகள், சித்தர்கள் ஞான சிந்தனையாளர்கள் என பலரைத் தோற்றுவித்தான் என்பதால் இறை சக்தியின் பேராற்றலை என்னவென்று சொல்வது? கோடி யுகங்கள் கடந்து போயிருக்கின்றன. எத்தனையோ ரிஷிகள், ஞானிகள் சித்த புருஷர்கள் இன்றும் உலகிடை வந்த வண்ணமிருக்கிறார்கள்.

அண்ட வெளியில் நவ கோள்கள் தோன்றின. ஐயமெல்லாம் இருளை நீக்கும் சூரியன் நவக் கோள்களின் முதன்மையானவன் அனல் கக்கும் இவன் இல்லாது ஏதுமில்லை எனலாம். உடலில் அனல்சூடு இல்லையெனில் உடல் மரணம் எய்தும். சூரியனை உயிராகவும், சந்திரனை உடலெனவும், செவ்வாயை விழிகளாகவும், புதனை ஸ்பரிசமாகவும், குருவை மூக்குக்கும், சுக்கிரனை நாவிற்கும், சனியை செவிகட்கும், ராகுவை மலவாய்க்கும், கேதுவை இனக்குறிக்கும் பிரித்து வைத்து மனிதன் என்னும் உயிரை செயல்பட வைத்தான். இவைகளை அறிந்து எந்நேரத்தில் குழந்தை பிறக்கிறதோ அதை துல்லியமாக சோதிடம் கூறுகிறது.

குழந்தையின் எதிர்காலம், ஏற்றத்தாழ்வு இவை கணக்கிடப்பட்டு சொல்லப்படுகிறது. மனிதர்கள் எல்லோரும் ஆணவம், மாயை, காமம், ஆசை, கள்ளுண்ணல் இவைகட்கு அடிமையாகி விடுவதால் மரணம் பிறக்கிறது. பஞ்ச பூதங்களின் ஒருங்கிணைப்பே உலகம் என்னும் மாயை. இப்பிரபஞ்சமானது இயற்கையென்னும் இறை சக்தியின் பாற்பட்டே இயங்குகின்ற இம்மாயா உலகில் ஏதும் எவர்க்கும் நிரந்தரமில்லை என்ற

*பேரூண்மையை உணர்கின்ற உண்மையான ஆத்மாவை பெற்றவர்களே சித்தர்கள் ஆவார்கள் என்பதாம்.*

"பொங்கு பல சமயமெனும் நதிகள் எல்லாம்
புகுந்து கலந்திட நிறைவாய்
பொங்கி யோங்கும் கங்கு
கரை காணாத கடலே"

*(ராமலிங்க சுவாமிகள்)*

"காதற்ற வூசியும் வாரா துகாண் கடைவழிக்கே"

*(பட்டிணத்தார்)*

*சாதி மத பேதமின்றி இறைசக்தி எல்லோர்க்கும் பொதுவாக செயல்படும் போது இப்பரந்த உலகில் எல்லாம் எல்லோர்க்கும் பொதுவாய் அமைதலும் விட்டுக் கொடுத்தலும் மறத்தலும் மன்னித்தலும் மனித சக்தியால் முடிந்த ஒன்றானால் யாவரும் சித்தர்களே.*

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி"

*(ராமலிங்க வள்ளல்)*

''தமிழின் சொல்லாட்சி மூலமே இறையனார் அகப்பொருள''

## முதலுரை

*'தமிழி' என்று இசைபட வழங்கி 'தமிழ்' என்று மருவுபெற்று சமஸ்கிருதம், இந்தி, கன்னடம், பழைய தெலுங்கு என எல்லா மொழிகளுக்கும் உண்டான் அடிப்படை மூலாதார மூலக்கூறுகளை ஒருங்கே அமையப் பெற்றேதுமிணையில்லாத 'இறை' என்று சைவ சமயத்தாரால் போற்றப்பெறும் அருமறைக் கடவுளாக அழலவிர் சோதியாக ஆக்கியோனாக, வரைபுரையு மாடக்கூடல் ஆலவாயிற் பால்புரை பசுங்கதிர்க் குழவித் திங்களை குறுங்கண்ணியாக அணியப்பெற்று 'சிவபெருமானே' இதன் ஆசிரியன் எனப்பட்டதும்,*

"வினையினீங்கி விளங்கிய அறிவின் முனைவனாற் செய்யப்பட்டமையால்"

*வழிநூலென்று சொல்லப்படாது முதல் நூல் எனப்படுமே என்னை.*

*இந்நூலின் எல்லை என்பது*

"வடக்கு தெற்குங் குடக்கும் குணக்கும்
வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்று"
அந்நாள் கெல்லை யகவயிற் கிடந்த
"நூலதின் முறையே வாலிதின் விரிப்பின்"
"வட வேங்கடத் தென்குமரி
ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து"

*என காக்கைப் பாடினியாரும், தொல்காப்பியரும் சொன்னார்களின்*

## 'செய்தனாற்' பெயர்பெற்றன, 'அகத்தியம் தொல்காப்பியம்'

*இவை செய்வித்தனாற் பெயர் பெற்றன. சாதவாகனம் இனந்திரையம் என இவை. இடுகுறியாற் பெயர்பெற்றன் நிகண்டு. நூல், கலைக்கோட்டுத்துண்டு என இவை. அளவினாற் பெயர் பெற்றது. பன்னிரு படலம் என்பது என்னை, சிறப்பினாய் பெயர் பெற்றது களவியல் என்பது என்னை.*

*களவு கற்பு என்னுங் கைகோளிரண்டனுள் களவினைச் சிறப்புடைத் தென்று வேண்டும் இவ்வாசிரியன் என்னை? ''இது முனைவனாற் செய்யப்பட்ட நூலாகலாற்'' குற்றமின்றாயிமைமயிற் கேட்டாரையின் றென்பது இன்றெனினும் உரை நடத்துவாரா நின்றமை நோக்கக் கேட்டாரையுமுடைத்தென்பது யாரோவெனின் மதுரை உட்பூரிகுடிகிழார் மகனாவான் உருத்திரசன்மன் தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச் சங்கமென மூவகைப்பட்ட சங்கம் இரிஇயனார் பாண்டியர்கள் அவருள் தலைச்சங்கமிருந்தார் அகத்தியனாரும் திரிபுரம் எறித்த விரிசடைக் கடவுளும், குன்றெறிந்த முருகவேளும், முரஞ்சியூர் முடிநாகராயரும் நிதியின் கிழவனுமென இத்தொடக்கத்தா ஐஞ்நூற்று நாற்பத்தொன்பதின்மர் என்ப அவருள்ளிட்டு*

*நாலாயிரத்து நானூற்று நாற்பத்தென்பதின்மர் பாடினாரென்ப.*

*அவர்களால் பாடப்பட்டன எத்துணையோ பரிபாடலும், முதுநாரையும் முதுகுருகும் களரியா விரையுமென இத்தொடக்கத்தன அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு சங்கமிருந்தாரென்ப. அவர்களைச் சங்கமிரீ இயினார் காய்ச்சின வழுதி முதலாகக் கருங்கோன் ஈறாக எண்பத்தொன்பதின்மரென்ப அவருட்கவியரங் கேறினார் எழுவர் பாண்டியரென்ப அவர்க்கு நூல் அகத்தியம்.*

*இனிக் கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தர் சிறுமேதாவியாரும் சேந்தம் பூதனாரும் அறிவுடை அரனாரும், பெருங் குன்றார்க் கிழாரும், இளந்திருமாறனும், மதுரையாசிரியர் நல்லந்துவனாரும், மருதனிளநாகனாரும், கணக்காயனார் மகனார் நக்கீரனாருமென இத்தொடக்கத்தார் நாற்பத்தொன்பதின்மரென்ப. அவருள்ளிட்டு நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினாரென்ப அவர்களாற் பாடப் பட்டன நெடுந்தொகை நானூறும், குறுந்தொகை நானூறும் நற்றிணை நானூறும், புறநானூறும், ஐங்குநுறூறும், பதிற்றுப்பத்தும், நூற்றைம்பது கலியும் எழுபது பரிபாடலும் கூத்தும் வரியும், சிற்றிசையும் பேரிசையுமென்று இத்தொடக்கத்தன அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமுமென்ப அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது ஆயிரத்தெண்ணூற்றைம் பதிற்றியாண்டு என்ப. அவர்களைச் சங்கமிரீ இயினார் கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதியீறாக நாற்பத்தொன்பதின்மரென்ப அவருட் கவியரங்கேறினார் மூவர் பாண்டியரென்ப சங்கமிருந்து தமிழாராய்ந்து உத்தரமதுரையென்ப என கடைச்சங்ககாலத்து தெய்வப்புலவரான நக்கீரனார் இதனுரையில் முச்சங்கங்கள் பற்றியும் சங்க இலக்கியங்கள் உருவான வரலாற்றை விளக்குவதும்.*

"எழுத்துஞ் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே"
பொருளதிகாரம் பெறேமெனின் இவை பெற்றும் பெற்றிலேம்"

*எனச்சொல்லாநிற்ப*

"மதுரை ஆலவாயிற் அழனிறக் கடவுள் சிந்திப்பான் என்னை பாவம்!
அரசர்க்குக் கவற்சி பெரிதாயிற்று அதுதானும் ஞானத்திடையதாகலான்
யாம் அதனை தீர்க்கற்பாலம்"

*என்று இவ்வறுபது சூத்திரத்தையுஞ் (களவுகற்பு) செய்து மூன்று செப்பிதழகத்தெழுதிப் பீடத்தின் கீழிட்டான் இன்மையிற் கவற்கின்றாமென்பது பட்டுச் செல்லா நின்றதுணர்ந்து நம் பெருமான் அருளிச் செய்தானாகும் பொருளதிகாரம் என்று என்னை*

தமிழ் தான் நான்கு வகை
"எழுத்தும் சொல்லும் பொருளும் யாப்பு மென"
நூல் யாப்பு என்பது
தொகுத்தும் விரித்துந் தொகை விரியாகவும்
மொழி பெயர்த்துமென என்னை?

"தலைமகட்கு நாண் மடம் அச்சம்
பயிர்ப் பென்ப குணம்"

*புணர்ச்சியென்பது*

*காட்சி, ஐயம், தெளிதல், தேறல் என இவை,*

*தெய்வப் புணர்ச்சியென்பது*

"வேறுமெனனின் றிகண்மலைந் தார்விழி ஒத்துவிண்போய் ஏறுந் திறங்கண்ட கோன்தென் பொதியி லிரும்பொழில்வாய்த்
தேறுந் தகையவண் டேசொல்லு மெல்லியல் செந்துவர்வாய்
நாறுந் தகைமைய வேஅணி யாம்பல் நறுமலரே எனவும்".
"ஆம்பனாறுந் தேம்பொதி கிளவி"

*எனவும்*

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி

காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழிஇய நட்பின் மயிலியற்
செறியெறிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோநீ யறியும் பூவே"
இவை அப்பாற்படுத்துக் கொள்க.

"களவினுள் தவிர்ச்சி வரைவின் நீட்டம்
திங்க ளிரண்டின் அகமென மொழிப"

பிறைத்திங்கள் மதித்திங்கள்
"அண்ணாந் தேந்திய வனமுலை தளரினும்
பொன்னேர் மேனி மணியிற் றாழ்ந்த
நன்னெடுங் கூந்த னரையொடு முடிப்பினும்
நீத்த லோம்புமதி பூக்கே முர"

*என இலக்கியம் வருவன உளவோவெனின்,*

"களவினுட் டவிர்ச்சி காப்புமிகி னுரித்தே
வரைவிடை வைத்த காலை யான"
இவ்வகையான் இடையீடு தலைமகளைச் சார்ந்துழி யவாகலாற் பெறப்பட்டதென்பது.

*பாலையென்பது,*

"பொருள் வயிற் பிரியினும் புணர்ந்துடன் போகினு
அதுபிரி வுரைப்பினும் பாலை யாகும்".

*என்றாகலின்,*

"ஓதல் காவல் பகை தணி வினையே
வேந்தற் குற்றுழிப் பொருட் பிணி"

*என அறியாமைப் பிரிதலென்பது என்றாகலின்,*

"அம்பலும் அலரும் களவு என்பது"
அம்பலென்பது முகிழ்த்தல் அலரென்பது சொல் நிகழ்தல்
அம்பலென்பது சொல் நிகழ்தல், அலரென்பது இல்அறிதல்
அம்பலென்பது இல்அறிதல், அலரென்பது அயல் அறிதல்;
அம்பலென்பது அயல்அறிதல், அலரென்பது சேரி அறிதல்;
அம்பலென்பது சேரி அறிதல், அலரென்பது ஊர; அறிதல்;
அம்பலென்பது ஊர்; அறிதல், அலரென்பது நாடு அறிதல்
அம்பலென்பது நாடு அறிதல், அலரென்பது தேசம் அறிதல்;
அதுபொருந்தாது, என்னை
அம்பலெனப்பட்டதே அலரும், அலரெனப்பட்டதே
அம்பலுமாயின இது களவின்பாலே கொள்கவென்பது
"தந்தை தாயே தன்னைய ரென்றாங்கு
அன்னவ ரறியப் பண்பாகும்மே"

## உலகியல்பு உரைத்தல்

"எறித்தரு கதிர்தாங்கி ஏந்திய குடைநீழல்
.................................................................
பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர;க் கல்லதை
மலையுளே பிறப்பினு மலைக்கவைதா மென்செய்யும்
நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே;
சீர்கெழு வெண்முத்த மணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினு நீர்க்கவைதா மென்செய்யுஞ்
தேருங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே;
ஏழ்புண ரின்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழளே பிறப்பினும் யாழ்க்கவைதா மென்செய்யுஞ்
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே
எனவாங்கு, இறந்த கற்பினாட் எவ்வம் படரன்மின்
சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்
அறந்தலை பிரியா வாறுமற் றதுவே"

## முடிவுரை

*ஆதியும் அந்தமுமில்லா அருட்பெருஞ்ஜோதி வடிவாகத் திகழும் திரிசடை, பிறைமதி, அரவம்பூண் முக்கண்ணணாற் எழுதப்பெற்ற இவ்வகப்பொருள் இலக்கண ஒழுக்கத்தாரர் பண்பட்டு இற்றை நிலையிலும் மென்மேலும் செம்மொழியாக மெருகேறத் தமிழோடு வாழ்வோம் நாம்.*

**Referencess**

(2002). *Chennai Palkalaikalaga Pada Nuul*. Chennai: University of Chennai.
Irodu Adalarasu. *Sithargalin Varalaru*. Chennai: Thiruvarasu Puthaga Nilayam.
Kopala Krishnan. *Pathinensithargal Varalaru*. Chennai: Mullai Publications.
Poovannan. *Tamil Ilakiya Varalaru*. Chennai: Kalaga Veliyidu.

Rajantheran, M., Sarjit S., Gill., Balakrishnan Muniapan., Silllalee, K., and Manimaran, S. (2014). "A Critical Analysis OfSiddha Tradition In The Context Of Malaysian Hindu Culture." *Life Sci J* 2014;11(7): 27-32]. (ISSN:1097-8135).http://www.lifesciencesite.com.

Rajantheran,M and Raja Viknarasah. (2014). "Lord Murugan in the Vedas." *Journal of Indian Culture and Civilisation*. (Vol.1,pp.11-17). ISSN:2289-7194.

Rao Bahator, Pavananthampillai, S. *Irayanar Agaporulurai*. Chennai: Mullai Nilayam.
Santhirasegaran. *Sithargal Aruliya Valkayin Vetri*. Chennai: Mullai Publications.

Silllalee,K. (2013). "Spritualism and Siddha Medicine as potrayed by TV Seriel Sivamayam." *Journal of Indian Studies, Special Issue: Articles on Siddha and Ayurveda traditions.* (pp.55-58). ISSN: 1675-171x.